10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
# Ethiroli

குரல் 01 அதிர்வு 214 ஞாயிற்றுக்கிழமை டிசெம்பர் 24 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## முன்னேறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 24

உடல் நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தற்போது தேறி வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் கடந்த வியாழக்கிழமை சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர் உடல் நலம் தேறுவதால் விரைவில் வீடு திரும்புவார் எனக் கூறப்படுகின்றது. (ச)

## முற்றவெளியில் பிக்கு உடல் தகனம் ஏற்றுக்கொள்ள முடியாதது

### தமிழரசுக் கட்சி சொல்கிறது

யாழ்ப்பாணம், டிசெ. 24

மக்கள் நடமாடும் பொது இடம், இந்து ஆலயம் அமைந்துள்ள முற்றவெளியில் நாக விகாரை விகாராதிபதியின் உடல் தகனம் செய்யப்பட்டமை ஏற்கப்பட முடியாதது.

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலரும், வடமாகாண சபை அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முற்றவெளியில் பிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டமை 06

## விக்கியின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சுபவர்களே விமர்சிக்கிறார்கள்

### சுதந்திரக் கட்சிக்கு ஐங்கரநேசன் பதிலடி



யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஓர் அரசியல்வாதியாக தோற்றுவிட்டார் என்று கூறுபவர்கள் முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சியே அவ்வாறு விமர்சித்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய 06

## சம உரிமைகளுடன் வாழ சகலரும் ஒன்றுபடுவோம்

### மீலாத் விழாவில் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 23

நாட்டில் சம உரிமைகளுடன் வாழ தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா.

மீலாத் தேசிய விழா நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயக அரசியல் சமூக விழுமியங்கள் மனிதாபிமானம் மனித உரிமைகள் பற்றி நபிகள் நாயகத்தின் கோட்பாடுகளில் உள்ளன. அவை அடக்கி ஒடுக்கப்பட்ட இந்து, இஸ்லாம் கிறிஸ்தவ மக்களுக்காக இருக்கலாம். அதனடிப்படையில் தங்கள் நாட்டில் - தாம் வாழும் மண்ணில் சக உரிமை உள்ளவர்களாக மக்கள் வாழ வேண்டுமென்பதில் நபிகள் நாயகம் பெருவெற்றி பெற்றுள்ளார். 06

# தமிழரசுக்குள் ஐக்கியமானது

## ஜனநாயகப் போராளிகள்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை உள்வாங்கி உருவாக்கப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சி இலங்கை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அது பங்காளிக் கட்சியாக உள்வாங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நடக்கவுள்ள உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உறுப்பினர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடாக வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். இதனால்இத்தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக ஜனநாயகப் போராளிகள் கட்சி பிரசாரத்தில் ஈடுபடும் எனவும் கூறப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின்துணைப் பொதுச் செயலர் சீ.வீ.கே. சிவஞானம், 06




## அரசுக்கு தோல்வி

கொழும்பு, டிசெ. 24

பொலித்தீன் மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்புக்களை தடை செய்ய அரசாங்கம் எடுத்த நடவடிக்கை தோல்வி அடைந்து விட்டது என சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் கூறியுள்ளது.

தடை செய்யப்பட்ட பொலித்தீன் வகைகள் வேறு விதமாக மீண்டும் பயன்பாட்டிற்கு வந்துள்ளன என அந்த மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே தெரிவித்தார்.

ஏற்கனவே பயன்பாட்டில் இருந்த பொலித்தீன் வகையை விட அந்த பொலித்தீன் வகைகள் மனித உடலுக்கு பாதகமானது என்றும் அவர் சொன்னார். (ச)

## அமெரிக்காவை பகைத்தது இலங்கை

### ஐ.நா.வில் எதிராக வாக்களிப்பு

கொழும்பு, டிசெ.24

இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமாக அமெரிக்கா அங்கீகரித்ததை வாபஸ்பெற வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஐ.நா. பொதுச் சபையில் ஜெருசலேத்தின் நிலைப்பாடு குறித்து எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானமும் செல்லாததும் வலிதற்றதும் ஆகும். இத்தகைய தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானம் இயற்றப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை 06

## மீண்டும் ஓர் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 24

மிகின் லங்கா மற்றும் ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனங்களில் இடம்பெற்ற நிதி மோசடி குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை இம்மாதம் 31ம் திகதி கிடைத்த பின்னர், இந்தக் குழு நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த விடயத்தை வெளியிட்டார். (ச)




உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழில் மீலாத் விழா நேற்றுக் கோலாகலம்

யாழ்ப்பாணம், டிசெ.24

2017 ஆம் ஆண்டுக்கான தேசிய மீலாத் விழா நிகழ்வு (நபிகள்நாயகத்தின் பிறந்த தின நிகழ்வு) யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கோலாகலமாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் உள்ள வளாகத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் மற்றும் தபால் அமைச்சர் எம் .எச் .எம் .ஹலீம், வர்த்தக வாணிப அமைச்சர் றிசாட் பதியுதீன் , தமிழரசுக் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா மற்றும் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.(அ)

# மல்லிகைத் தீவுக்கு தாருங்கள் குடிநீர்



முல்லைத்தீவு, டிசெ.24


முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் மல்லிகைத் தீவு பகுதியில்குடிநீருக்கென குழாய்க் கிணறு அமைத்தும் அதன் மூலம் போதுமான குடிநீரைப் பெறமுடியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் குடிநீர் பெறமுடியாத நிலை நிலவியதையடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு கொள்கலன்கள் வைக்கப்பட்டு அதன் மூலம் நீர் வழங்கப்பட்டு வந்ததது. இந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் மூலம், குறித்த பகுதியில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து குறித்த பகுதிக்கான குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டு கொள்கலன்களும் எடுத்து செல்லப்பட்டிருந்தன.

ஆயினும் பிரதேச செயலகத்தால் அமைக்கப்பட்ட குழாய்க்கிணற்றின் மூலம் போதுமான குடிநீரைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருப்பதாகவும், மஞ்சள் நிறமான, மண் கலந்த நீரே கிடைப்பதாகவும் மக்கள்தெரிவித்துள்ளனர். எனவே தமது பகுதிக்கு தேவையான சுத்தமான குடிநீரை வழங்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## யாழில் இன்று மாலை நினைவழியா நாட்கள்



யாழ்ப்பாணம்,டிசெ.24

ஈழத்தின் ஊடகத் துறையின் அடையாளமான அமரர் எஸ்.எம். கோபாலரத்தினத்தின் (கோபு ஐயா ,எஸ்.எம்.ஜி ) நினைவஞ்சலிக் கூட்டமொன்று " நினைவழியா நாட்கள்" என்ற தொனிப் பொருளில் சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்), நாச்சிமார் கோவிலடி , யாழ்ப்பாணத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் ஈழத்தின் மூத்த ஊடகவியலாளர்களான ம.வ.கானமயில் நாதன், அ.பெருமாள், எஸ்.யோகரட்ணம் (இராதேயன்) , வீ.தேவராஜ் , பசீர் காக்கா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

யாழ் . ஊடக மையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# வாவிக்குள் பாய்ந்த பஸ் இருவர் உயிரிழப்பு





இரத்தினபுரி,டிசெ.24

இரத்தினபுரி பத்துல்பஹன பகுதியில் தனியார் பஸ் ஒன்று நேற்று சனிக்கிழமை 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து, விபத்துக்குள்ளானதில் 2 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் குழந்தை ஒன்று உட்பட 44 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஊருபொக்கவிலிருந்து கொழும்பு நோக்கி 60 பயணிகளுடன் பயணித்த குறித்த பஸ், வீதியை விட்டு விலகிச் சென்று 30 அடிப் பள்ளத்தில் வீழ்ந்து தொடங்கொட வாவியில் விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் பெண் ஒருவரும் ஆண் ஒருவருமே உயிரிழந்தனர். காயமடைந்தவர்களுள் 41 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையிலும், 3 பேர் கஹவத்தை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சீனா உதயகுமாரின் நூல் வெளியீட்டு விழா

வவுனியா,டிசெ.24

சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய “மாவீரன் செண்பகராமன்“ நூல் வெளியீட்டு விழா வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி க.சுவர்ணராஜா பிரதம விருந்தினராகவும், வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதிகள் தி.ஜெயகாண்டீபன், க .பரமானந்தம், வவுனியா தெற்கு ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் வீ.பரஞ்சோதி, வவுனியா தெற்கு வலய உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் ஜனாப் ஏ.எம்.ஸுபைர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெளியீட்டுரையை கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.பார்த்தீபனும், நயவுரையை புன்னைநீராவி அ. த. க. பாடசாலை ஆசிரியர் பிறைசிலும் நிகழ்த்தவுள்ளனர்.(அ)

# புலம்பெயரிகள் குறித்து இன்று கலந்துரையாடல்


யாழ்ப்பாணம், டிசெ.24

அமெரிக்க வட கரோலினாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் செல்வராஜா மோகனராஜா மற்றும் அமெரிக்கப் பிறின்ஸ்டன் பல்கலைக்கழக மாணவன் ஞானசேகரன் மகிசன் ஆகியோருடன் புலம்பெயர் தமிழர்களின் கல்வி மற்றும் கலைச் செயற்பாடுகள் அனுபவங்கள் பற்றிய விசேட கலந்துரையாடல் யாழ்ப்பாணம்,கந்தர் மடம் , பழம் வீதியில் அமைந்துள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் யாழ். பல்கலைக் கழக முன்னாள் நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இதில் அமெரிக்கக் கல்வி முறையியல் , புலம் பெயர் வாழ் ஈழ மக்களின் வாழ்வியல், கலை கலாசாரச் செயற்பாடுகள் குறித்துப் பேராசிரியர் மோகனராஜாவும், அமெரிக்கப் பல்கலைக்கழகக் கல்வியியல் முறைமைகள், இளைஞர்களின் பங்களிப்பு , மற்றும் இரண்டாம் தலைமுறையினரின் கலைச் செயற்பாடுகள் பங்களிப்புகள் குறித்துத் தாயகத்தில் பிறந்து புலம் பெயர்ந்து அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஞானசேகரன் மகிஷனும் கலந்துரையாடவுள்ளனர்.

எனவே குறித்த கலந்துரையாடலில் ஆர்வமுள்ள இளைஞர்கள், கல்வியியலாளர்கள், கலைஞர்கள் அரங்கத் துறை மாணவர்கள், படைப்பாளிகள் ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக நலன்விரும்பிகள் ஆகியோரைக் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# ஐயோ, சுனாமி!
## அக்கரைப் பற்றில் பதற்றம்



அக்கரைப்பற்று, டிசெ.24

அக்கரைப்பற்று கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில், கடல் நீர் திடீரென குடியிருப்பு நிலப்பிரதேசத்துக்குள் புகுந்ததால், மக்கள் சுனாமி என எண்ணி, அப்பிரதேசத்தை விட்டு வேறு பகுதிகளுக்கு ஓடினர்.

கடல் நீர் அப்பிரதேசத்திலுள்ள குடியிருப்பு மற்றும் பாதை நிலப் பகுதிக்குள் புகுந்தமையினால், அப் பிரதேசத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. மக்களும் அச்சத்திற்குள்ளாகி இருந்தனர்.

இதன்போது, கடல் அலை பெரும் கொந்தளிப்புடன், வழமையைவிட வேகமாக இருந்ததாகவும், கடல் நீர் சுமார் 15 மீற்றர் வரையான நிலப் பகுதிக்குள் புகுந்ததாகவும் குறித்த பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

“ஏனைய மாதங்களை விட மார்கழி மாதத்தில் இவ்வாறு இடம்பெறுவது வழமை. இதனால் மக்கள் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை” என அப்பிரதேச மீனவர்கள் தெரிவித்தையடுத்தே அங்கு சுமுக நிலை திரும்பியது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 24 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# கற்றுக் கொள்ளுங்கள் அவர்களிடமிருந்து

உலகத்தின் புருவங்களை உயர்த்தச் செய்யும் காரியமொன்றைச் செய்திருக்கிறது இலங்கை. இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேத்தை அமெரிக்க அங்கீகரித்ததை எதிர்த்து ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாகக் கையை உயர்த்தி ஆச்சரியப் புள்ளிகளை இலங்கை அள்ளியிருக்கிறது.

எப்போதுமே உலகின் வல்லரச எஜமான்களுக்கு எதிராக இலங்கை சுண்டுவிரலைக் கூட அசைத்ததில்லை. அவர்களின் ஆட்டங்களுக்கு ஏற்ப தாளம் போடும் வேலையையே இத்தனை நாட்களாக இலங்கை செய்து வந்தது. இருவேறு துருவங்களாக நிற்கும் வல்லரசுகள் எல்லாவற்றுக்கும் நல்லபிள்ளையாக இருக்கும் தந்திரம் இலங்கைக்கு கை வந்த கலை. அமெரிக்கா–சீனா, இந்தியா–சீனா, அமெரிக்கா–ரஷ்யா என்று உலகில் வல்லரசுகள் எதிராளிகளாக மாறி முட்டி மோதிக் கொண்டாலும் அந்த நாடுகள் அனைத்துக்கும் வாலையையும் தலையையும் காட்டி தனக்குத் தேவையானதை வாங்கிக் கொள்வதை மட்டும் இலங்கை குறியாகக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட 'ஆமாம் சாமி' அம்பி நாடு, திடீரென அந்நியனாக மாறி, தலையைச் சிலுப்பிக் கொண்டு, உலகின் அதியுச்ச வல்லரசு நாட்டுக்கு எதிராக முஷ்டியை முறுக்கியிருக்கிறது. இத்தனைக்கும் 'எமக்கு எதிராக வாக்களிக்கும் நாடுகளுக்கு எதிர்காலத்தில் ஒரு சதம் கூட உதவியாகக் கொடுக்க மாட்டோம்' என்ற, அமெரிக்க ஜனாதிபதியின் எச்சரிக்கையையும் மீறி, பிரேரணையை ஆதரிக்க ஒரு தைரியம் வேண்டும் தான்.

ஆனால் இந்தத் திடீர் தைரியத்துக்கு என்ன காரணம்?

இலங்கை முஸ்லிம்கள் ஜெருசலேம் விவகாரத்தில், பலஸ்தீனத்தின் பக்கமே இருக்கின்றனர். அவர்கள் ஜெருசலேத்தை மட்டுமல்ல, இஸ்ரேலைக் கூட ஒரு நாடாக ஏற்கத் தயாராகவில்லை. இந்த நிலையில் இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேத்தை அங்கீகரித்த அமெரிக்காவின் நடவடிக்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையை எதிர்த்தாலோ அல்லது வாக்களிக்காமல் தவிர்த்தாலோ அது இலங்கை அரசுக்கு உள்நாட்டில் முஸ்லிம்கள் மத்தியில் அவப்பெயரை ஏற்படுத்தி விடும். இந்தப் பிரேரணையில் இலங்கை வாக்களித்ததன் பின்னணியில், இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் இருந்தார் என்பதன் மூலம், முஸ்லிம்களின் அழுத்தமே, ஐ.நா சபையில் அம்பியாக இருந்த , இலங்கையை அந்நியனாக மாற்றியிருந்தது.

முஸ்லிம்களுக்கு அவ்வளவு தூரம் இலங்கை இடம் கொடுக்கிறதா என்ற கேள்வியும் இந்த நேரத்தில் எழலாம். காரணமில்லாமல் அரசு இப்படி இறங்கி வராது. பொதுபல சேனா போன்ற அமைப்புக்களை உருவாக்கி, முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் பௌத்த நாடொன்று, முஸ்லிம்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்து உலகப் பொலிஸ்காரனுக்கு எதிராக இறங்கியமை நம்பமுடியாத விடயம் தான். ஆனாலும் உள்ளூராட்சித் தேர்தலும், அரசைக் கொண்டு செல்வதற்கு தொடர்ந்தும் முஸ்லிம் கட்சிகளை நம்பியிருக்க வேண்டிய கட்டாயமும் அப்படிச் செய்ய வைத்துவிட்டன.

ஸ்பெய்னில் இருந்து கட்டலோனியா பிரிந்து செல்வதாக அறிவித்தபோது, உலகின் முதல் நாடாக அதனை எதிர்த்தமை, படகு மூலம் அகதிகளாக வந்த ரோஹிங்ய முஸ்லிம்களை, சிங்கள அமைப்புகளை ஏவிவிட்டு தொல்லை கொடுத்தமை, உள்நாட்டுப் போரில் லட்சக்கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்தமை என்று எப்போதும் சிறுபான்மையினருக்கு எதிரான அரசாகப் பிரகடனம் செய்திருந்த நாடொன்றை, சாதாரண உள்ளூராட்சித் தேர்தலை வைத்து, அமெரிக்காவுக்கு எதிரான துருப்புச் சீட்டாக மாற்ற முஸ்லிம்களால் முடிந்திருக்கிறது. ஆனால் அதே நாடாளுமன்றத்தில் 16 உறுப்பினர்களோடும், எதிர்க்கட்சித் தலைவர், குழுக்களின் தலைவர் போன்ற பதவிகளோடு இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் , இந்த அரசுக்கு அழுத்தம் கொடுத்து, யாழ்ப்பாணத்தில் ஒரு பிக்குவின் உடலை அடாவடித்தனமாகத் தகனம் செய்த நிகழ்வைத் தடுக்க முடியாமல் போய்விட்டது. முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் இருந்து சுயநல தமிழ் அரசியல்வாதிகள் அரிவரியில் இருந்து நிறைய விடயங்களைக் கற்கவேண்டியுள்ளது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



வெற்றிகர இருதய சத்திரசிகிச்சை

# பாராட்டு மழையில் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24

சகல வசதி வாய்ப்புகளையும் மேம்படுத்தி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை அபிவிருத்தி செய்து வடக்கு மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்த மத்திய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது - இவ்வாறு சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இளையோர் இருவருக்கு இருதய சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்ட இருதய சத்திர சிகிச்சை மருத்துவ வல்லுநர் சிதம்பரநாதன் முகுந்தன் தலைமையிலான மருத்துவக் குழுவினரை பாராட்டும் நோக்கில் சுகாதார பணிப்பாளர் நாயகம் தலைமையிலான சுகாதார அமைச்சின் உயர்மட்டக் குழுவினர் இன்றையதினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தனர்.

சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜெயசிங்க, பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் சிறிதரன் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுவினரே யாழ். போதனா வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர்கள் தாதியர்களைச் சந்தித்தனர்.

அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடி வைத்தியசாலையில் காணப்படும் குறைநிறைகள் தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்தனர். யாழ். போதனா வைத்தியசாலையில் காணப்படும் மருத்துவர்கள் மற்றும் தாதியர் பற்றாக்குறைகள் தொடர்பில் நிர்வாகத்தினர் சார்பில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி அமைச்சின் உயர்மட்டக் குழுவினருக்கு சுட்டிக்காட்டினார். இவை தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார பணிப்பாளர் தலைமையிலான குழுவினர்கள் வாக்குறுதி வழங்கினர். (ச)

# கொழும்பின் வருமானம் 1500 கோடி

கொழும்பு,டிசெ.24

கொழும்பு மாநகர சபை அடுத்த வருடம் ஆயிரத்து 500 கோடி ரூபா வருமானத்தை எதிர்பார்ப்பதாக கொழும்பு மாநகர ஆணையாளர் வீ.கே.ஏ.அனுர நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

"கொழும்பு மாநகர அபிவிருத்திக்காக 460 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு,திண்மக் கழிவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. கிடைக்கும் வருமானத்தைக் கொழும்பு நகர வாசிகள் மற்றும் நகரத்தை நாடும் மக்களின் நலன் கருதி பயன்படுத்தபடும்" என மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# துப்பாக்கி நபருக்கு விளக்கமறியல்

கொழும்பு,டிசெ.24

காலி ஊரகஸ்மங்சந்தி - ஹிபன்கந்த பகுதியில் கைத்துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகத்துக்குரிய ஒருவரைப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட குறித்த கைத்துப்பாக்கியுடன், நான்கு தோட்டாக்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

குறித்த சந்தேக நபர், எல்பிட்டிய நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

தேர்தல் முறைப்பாடுகள்

# அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.24

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்துக்குள் ஒரு முறைப்பாடு மட்டுமே கிடைத்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி முதல் நேற்று வரையிலும் 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில், தேர்தல்கள் முறைப்பாடுகள் 10 எனவும், தேர்தல்கள் சட்டத்தை மீறியமை தொடர்பிலான முறைப்பாடுகள் 06 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

# வட்டுவாகல் பாலத்தை புனரமைக்க நிதி கோரல்


முல்லைத்தீவு,டிசெ.24

"முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தினைப் புனரமைப்பதற்கான நிதி கோரப்பட்டுள்ளது, அதற்கான நிதி கிடைக்கும்பட்சத்தில் அதனைப் புனரமைக்க முடியும்" என மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நேற்று சனிக்கிழமை தெரிவித்தார்.

முல்லைத்தீவு, பரந்தன் ஏ-35 வீதி காபட் வீதியாகப் புனரமைக்கப்பட்ட போதும், இந்த வீதியில் காணப்படுகின்ற வட்டுவாகல் பாலம் சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.இந்தப் பாலத்தின் ஊடாகக் கனரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் இந்தப் பாலம் சேதமடைந்து போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டது தற்போது தற்காலிகமாகப் புனரமைக்கப் பட்டுப் போக்குவரத்துச் சீர் செய்யப்பட்டிருக்கின்றபோதும், பாலம் ஆபத்தான நிலையிலேயே காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் பாலத்தில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதும், உயிரிழப்புக்களும் கூட நிகழ்ந்திருப்பதாகவும் மக்கள் தெரிவித்தனர். (அ)



# சிங்கப்பூர் பிரதமரும் இலங்கை வருகிறார்

மலேசியப் பிரதமரின் விஜயத்தை அடுத்து சிங்கப்பூர் பிரதமர் லீ சின் லூங் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பின் பேரில் சிங்கப்பூர் பிரதமர் இந்த விஜயத்தை செய்யவுள்ளதாக அரச தகவல்கள் கூறுகின்றன.

சிங்கப்பூர் பிரதமரின் இந்த விஜயத்தின்போது, இலங்கை - சிங்கப்பூருக்கு இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றிலும் அவர் கையெழுத்திட உள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுதவிர, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய அரச பிரமுகர்களையும் சிங்கப்பூர் பிரதமர் இந்த விஜயத்தின்போது சந்தித்துக் கலந்துரையாடுவார் . (அ)

## இன்று நாளும் கோளும்

24.12.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 09 ஆம் நாள்

சஷ்டி காலை 09.54 மணி வரை | சதயம் பகல் 08.31 மணி வரை | சித்தயோகம்

இராகு காலம் 04.30 - 06.00 | சுபநேரம் 07.45 - 08.45 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | இலாபம் | செலவு | வரசு | சுகம் | சுபம் | பெருமை | மேன்மை | நலம் | நட்பு | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறவேண்டும் வாக்காளர்கள்

## மட்டக்களப்பு ஆயர் கோரிக்கை



மட்டக்களப்பு, டிசெ.24

“காலத்துக்கு ஏற்றவாறு வாக்காளர்கள் மாறவேண்டும். மாறத்தாமதிப்பதும், மாறாமல் இருப்பதும் சமூகத்துக்கு இடைஞ்சலையும், பாதிப்பையும் ஏற்படுத்தும். ஆதலால் வாக்காளர்களின் விரைவான மாற்றத்தைநான் வலியுறுத்துகிறேன்” என, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

சமகாலப் பிரச்சினைகள் பற்றி ஆராயும்கூட்டமொன்று ஆயரின்பணிமனையில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

“தற்போது நடைபெறவிருக்கும் தேர்தலில் பல புதியமுறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. வட்டாரத்தேர்தல்,பெண் பிரதிநிதித்துவம், வட்டாரத்தில் வைத்தே வாக்கெண்ணும்முறை, கட்சிக்கோஅல்லது குழுக்கழுக்கோ வாக்களிப்பது, இரண்டாவது பட்டியலில் இருந்து தெரிவு என்பன அவைகளில் பிரதான வகிபாகத்தை ஏற்கின்றன.

சாதி, இனம், மதம், ஊர் என்ற வரையறைக்குள் நின்றே பெரும்பாலானோர் முன்னர் வாக்களித்தார்கள். இதையும் விட கையூட்டமும் இருந்ததாக கூறப்படுகிறது. மிகமிகக் குறைந்த எண்ணிக்கையினரே இதற்கு அப்பால் சென்று வாக்களித்தார்கள்.

வாக்களிக்கும்போதுவாக்காளரொருவர்,வேட்பாளரொருவரால் நமக்கு அல்லது நமது சமூகத்திற்கு சேவை கிடைக்குமா? நமதுபொதுத் தேவைகள் நிறைவேறுமா? என்பது பற்றி தனிமையிலோ அல்லதுஒன்று கூடியோ சிந்திக்கவேண்டும்.

சிந்தித்தால் நல்லதெளிவான முடிவு கிடைக்கும். எனதுநோக்கமும் கரிசனையும் வாக்காளர்களை சிந்திக்கப் பண்ணுவதே. ஆதலால் உள்ளூர் முன்னோடிகள் எனது கருத்துக்களை தத்தமது கிராம மட்ட மக்களிடம் எடுத்துச் செல்லவேண்டும் . நிச்சயமாக அது மாற்றத்தை கொண்டுவரும். அதுவே எமது சமூகத்தினது மாற்றத்தின் முதற்படி” என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

## நீர்க்குழிக்குள் விழுந்து குழந்தை உயிரிழப்பு

கிளிநொச்சி, டிசெ.24

கிளிநொச்சி - கண்ணகிபுரம் பகுதியில் ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று நீர் நிரம்பிய குழியில் விழுந்து உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சத்தியசீலன் ஜெயந்தன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வறட்சி காரணமாக குழாய்க் கிணற்றில் பொருத்தப்பட்ட மோட்டாரினை தாழ இறக்கி பயன்படுத்துவதற்காக குழியொன்று வெட்டப்பட்டுள்ளது. இந்த குழியிலேயே குறித்த குழந்தை விழுந்துள்ளது. இந்த நிலையில் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை காணவில்லை என தெரிவித்து அயலவர்களின் உதவியுடன் பெற்றோர் தேடியுள்ளனர்.இதன்போது குழந்தை குறித்த குழியில் விழுந்து கிடப்பதை அவதானித்து மீட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அந்த குழந்தை உயிரிழந்துள்ளது.இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

## 2 கட்டங்களாக விடை மதிப்பீடு

கொழும்பு, டிசெ.24

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இரண்டு கட்டங்களின் கீழ் இடம்பெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

“முதலாம் கட்ட விடைத்தாள் திருத்ததப் பணிகள் எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

விடைத்தாள் திருத்தப் பணிகள் தொடர்பான விசேட பயிற்சி செயலமர்வொன்று எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி, 30ஆம் திகதி நிறைவுபெறவுள்ளது” என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## பெண் வேட்பாளர் பிரச்சினைக்கு விசேட தொலைபேசி இலக்கம்

கொழும்பு,டிசெ.24

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து முறைப்பாடு செய்வதற்கு விசேட தொலைபேசி இலக்கமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பெண் வேட்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அசௌகரியங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யவும் அறிவிக்கவும் தனியான தொலைபேசி இலக்கமொன்று விரைவில் அறிமுகம் செய்யப்படும். மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து இந்த முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்” எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பசிலின் விளையாட்டு மகிந்தவுக்கு தெரியாது

### நாமல் ஆதங்கம்



கொழும்பு, டிசெ.24

“நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவனே அன்றி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் அல்ல. ஆனால் பசில் ராஜபக்சவின் விளையாட்டை என் தந்தை மகிந்த இன்னும் புரிந்து கொள்ளவில்லை” என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

“என்னிடம் ஆலோசனை பெறும் அளவுக்கு அரசியலில் தான் குழந்தை அல்ல என்று எனது தந்தை மகிந்த கூறியுள்ளார். ஆனால், பசில் சித்தப்பா இந்தியாவுடன் இணைந்து ஆடும் விளையாட்டு அப்பாவுக்கு புரியவில்லை. பொதுஜன முன்னணிக்குள் இருக்கும் வெளிநாட்டு சக்திகளை நாம் சரியாக அடையாளம் காணவேண்டும்.அதேபோல், என்றாவது ஒருநாள் பொதுஜன முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும். அந்த கட்சியின் தலைவர் ஜி.எல்.பீரிஸ், ஐக்கிய தேசியக்கட்சிக்காரர்.அதேபோல் அதன் தேசிய அமைப்பாளரான பசில் சித்தப்பா, காமினி திஸநாயக்கவின் ஆலோசகராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாகவே அரசியலை ஆரம்பித்தார்.இதனால், நாங்கள் தற்போது தலை குனிந்து கொண்டு சென்றாவது மைத்திரியுடன் இணக்கத்தை ஏற்படுத்தி மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை பிடிக்க வேண்டும். நான் இன்று கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பசில் சித்தப்பா 2022 ஆம் ஆண்டுக்குள் பொதுஜன முன்னணியுடன் ஐக்கிய தேசியக்கட்சியிலேயே சென்று நிற்க போகிறார்.இதனால், எந்த சித்து விளையாட்டையாவது ஆடி நாங்கள் மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றுவோம்” என நாமல் ராஜபக்ச தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார். (அ)



## நல்ல காரியங்கள் நடக்கிறதுக்கு நாங்கள்தான் சப்போட் பண்ண வேணும்

“அண்ணை இண்டைக்கு ஒரு நல்ல விசியம்” எண்டு வரேக்கையே சொல்லிக் கொண்டு வந்து சைக்கிளை விட்டுப் பாஞ்சு இறங்கினான் முதலி. சைக்கிளை ஸ்ராண்டிலை விட்டதும், விடாததுமாத் தன்ரை கான்போனைச் சேட்டுப் பொக்கற்றக்குள்ளாலை உருவிப் “பாரண்ணை” எண்டு காட்டினான்.

அதிலை எங்கடை பெரியாஸ்பத்திரியின்ரை பெரியவரும், கொஞ்ச வேறை ஆக்களூமாச் சேர்ந்து சிரிச்சுக் கொண்டு நிக்கிற படங்கள் கிடந்திது. “என்னடா விசேஷம்” எண்டு முதலியைக் கேட்டன்.

இனி அண்ணை யாழ்ப்பாணத்திலை உள்ள நெஞ்சு வருத்தக்காரருக்குப் பயமில்லை. அவை இனிக் கொழும்புக்குப் போகத் தேவைஇல்லை. எங்கடை பெரியாஸ்பத்திரியிலையே இனி ஒப்பிரேஷனைச் செய்யலாம். இப்ப இரண்டு நாளைக்கு முன்னம் நடந்த ஒப்பிரேஷன் சக்சஸ். அதில ஒப்பிரேஷன் செய்த டொக்டர்மாரும்அவரோடைகூட நாடஇருந்தவையளையுந்தான் படம் பிடிச்சுப் போட்டுக்கிடக்கு.

என்னைப் பொறுத்தவரை அந்த டொக்டரும், அதுக்குச் சகல ஒத்தாசை செய்த பெரியவர் சத்தியமூர்த்தி ஐயாவும் இனி கனபேருக்குக் கடவுளாய்ப் போவிடுவினம்.

உப்பிடிக் கன விசியங்களைச் செய்ய சத்திய மூர்த்தி ஐயா தெண்டிக்கிறாராம். ஆனால் அதுக்கு முட்டுக் கட்டையாயும் சிலபேர் இருக்கினமெண்டு சொல்லிச்சினம். முட்டுக் கட்டையா மாத்திரம் இருக்கின மெண்டில்லாமல் அந்த ஆளைக் கீழை இழுத்து விழுத்திற மாதிரியும் பல விளையாட்டும் நடக்கிதாம். உது வெளியிலை இருந்து இல்லை. அங்கை வேலை செய்யிற ஆக்கள் தானாம் உந்த விளையாட்டைச் செய்யினமாம். கூட இருந்து குழி பறிக்கிற இயக்கம் ஒண்டு ஆஸ்பத்திரியிலை இருக்குதாம்.

சத்தியமூர்த்தி ஐயா வேலையிலை கொஞ்சம் கறார் பேர்வழி எண்டு கேள்வி. தொழிலை ஒழுங்கம் இருக்க வேணும் எண்டிறதிலை கவனமான இருக்கிற ஆள். அது ஒழுங்கங் கெட்டதுகளுக்குச் சரிவராது தானே? இவற்றை ஒழுக்கம் தங்களுக்கு இடஞ்சலாக் கிடக்கெண்டு சில டொக்டர்மாரும் மனசுக்கை கறுவின படியாம். இதாலை பெருத்த தலையிடியோடை தானாம் உவர் வேலை செய்யிறார். அந்தாளிட்டை பல நல்ல காரியத்தை ஆஸ்பத்திரிக்குச் செய்ய வேணும், அதாலை சனம் பிரயோசனமடைய வேணும் எண்ட விருப்பம் கனக்க இருக்குது. எப்பவும் நல்ல ஆள் எண்டு கண்டால் அவைக்கு ஆப்படிக்க எண்டு ஒரு கூட்டம் பின்னாலை இருக்கிது. அதுவும் யாழ்ப்பாணத்திலை கண்ணுக்கை நல்லெண்ணெய் விட்டுக் கொண்டு கனக்கப் பின்னாலையும், முன்னாலையும் திரியுங்கள், பிழை கண்டுபிடிக்க.

கெட்ட நோக்கமும், களவுச் சிந்தனையும் உள்ள வைக்குப் பதவியிலை கள்ளர் இருந்தால்தானே சந்தோஷம். அதுதானே அவையின்ரை விருப்பமும்.

உந்த நெஞ்சு ஒப்பிரேஷனுக்கெண்டு காத்துக் கொண்டு கன சனம் இருக்கினமாம். காலம் போறதிலை ஒப்பிரேஷன் செய்யாமல் சாகிற ஆக்களும் இருக்காம். இப்ப கூட குறைஞ்ச வசதியளோடைதான் ஒப்பிரேஷனைச் செய்திருக்கினம் எண்டு போட்டுக் கிடக்குது. அப்ப வசதியும் குறைஞ்சு. செய்யிறதுக்கு இட வசதியும் இல்லாமல் இதையாவது அந்த மனுசன் செய்யிதே எண்டு யோசிக்காமல் “ அவர் பழைய பூனை, சருகுப் புலி, சிறுத்தை, வரிப் புலி, வங்காளப் புலி” எண்டு பெட்டிசன் எழுதிக் கொண்டிருக்கிதுகள் சில நாயள். உவையளை நாய் எண்டு திட்டினால் பாவம். ஏன் எண்டால் நாய்க்கு நன்றி இருக்கு. தனக்குச் சாப்பாடு போடுற எசமானைக் காக்க வேணும் எண்ட பொறுப்பும் இருக்கிது. உதுகளை ஓநாயள் எண்டுதான் திட்டவேணும். ஏனெண்டால் பிணம் தின்னிற சாதியள். மேலை கதைச்சால் இரத்தந்தான் கொதிக்கும். நல்லது, போட்டுவாறன்.

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எதிரணிக்குப் பரப்புரை செய்தால்

# சுதந்திரக் கட்சியில் இருந்து மகிந்த நீக்கப்படுவார்





கொழும்பு,டிசெ.24

“சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பரப்புரைகளை மேற்கொண்டால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்” என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் துமிந்த திசநாயக்க நேற்று சனிக்கிழமை எச்சரிக்கை விடுத்தார்.

“மகிந்த ராஜபக்ச இன்னமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே இருக்கிறார். எனவே, உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெறுவதற்கு அவர் பணியாற்ற வேண்டும். கட்சிக்கு எதிராக, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பரப்புரைகளை மேற்கொண்டால், அவர் கட்சியில் இருந்து நீக்கப்படுவார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எவரேனும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு அளித்தால், அவர் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டு, கட்சியின் யாப்புக்கு அமைய, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு அளிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை அடையாளம் காணும் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கட்சி யாப்பை மீறியமை தொடர்பில் ஆதாரங்களுடன் அடையாளம் காணப்படுவர். இந்தத் திட்டம் ஏற்கெனவே வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது” என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## அந்தநாள் ஞாபகம்



### 24.12.1690

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்மஸ் இரவு ஆராதனைக்காகக் கூடியிருந்த சுமார் 300 கத்தோலிக்கர்கள் டச்சுப் படைகளினால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர்.

# இலங்கையே இப்போது போதைப்பொருள் மையம்

## மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.24

சர்வதேச போதைப் பொருள் மையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

“முன்னர் தேயிலைக் கைத்தொழில் துறையில் உலகப் பிரசித்தி பெற்றிருந்த இலங்கை இன்று போதைப் பொருள்வர்த்தகத்தின் ஊடாக உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. தற்பொழுது இலங்கையில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும் போதைப்பொருள் விநியோகம் செய்யும் கேந்திர நிலையமாக இலங்கை மாற்றமடைந்துள்ளது.

சதொச நிறுவனத்துக்குச் சொந்தமான லொறிகளிலும் போதைப் பொருள் விநியோகம் செய்யப்படுவதோடு, கொள்கலன்களில், லொறிகளில் போதைப் பொருட்கள் மீட்கப்படுகின்றன. ஆனால் பிடிக்கப்படும் போதைப்பொருட்களுக்கு என்ன நேர்கின்றது என்பது தெரியவில்லை. எனினும், போதைப்பொருட்களை இல்லாதொழிக்கவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் அரசாங்கத்துக்கு எவ்விதத் திட்டங்களும் கிடையாது” எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# யானை தாக்கி ஒருவர் பலி

கொழும்பு,டிசெ.24

ஹொரவப்பொத்தானை, மொரவெவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை, காட்டு யானை தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு நபர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மொரவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார். இதன் காரணமாகக் குறித்த பிரதேச மக்கள் நேற்று ‘காட்டு யானைகளைக் கட்டுப்படுத்தக் கோரி’ எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (அ)

## விசேட அதிரடிப் படைக்கு

# நீதிமன்று உத்தரவு

கொழும்பு,டிசெ.24

வெளிநாடொன்றிலுள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதுஷுடன் நேரடித் தொடர்பு வைத்திருந்த சந்தேக நபரொருவர் உட்பட 8 பேரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை, தடுத்து வைத்து விசாரணை செய்ய பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு நீர்கொழும்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கியுள்ளது. குறித்த சந்தேக நபர்கள் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# மின்நிலையத்துக்கு மைத்திரி திடீர் ‘விசிட்’!

கொழும்பு,டிசெ.24

மொரகஹகந்த மின்கட்டமைப்புத் திட்டப் பிரதேசத்துக்குத் திடீர் விஜயமொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

தேசிய மின்கட்டமைப்புக்கு 25 மெகாவோட் மின்சாரத்தை வழங்கும் மொரகஹகந்த நீர் மின்சார நிலையத்தின் பரீட்சார்த்த நடவடிக்கை தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்த்தறியவே ஜனாதிபதி திடீர் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

நாட்டில் குறுகிய காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மின்சார நிலையமான மொரகஹகந்த நீர் மின்சார நிலையம் நான்கு டர்பைன்களின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியது. குறித்த நீர்த்தேக்கத்தின் நீர்கொள்ளளவு 4 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் அடிகளைக் கொண்டதாகும். இங்கு தற்போது சுமார் 93 வீதமான அளவான 4 லட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் அடி நீர் நிறைந்துள்ளது. மின்சார உற்பத்திக்குத் தேவையான அளவு நீர் சேமிக்கப்பட்டதும், மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாட்டின் விவசாயத்துறைக்குப் புத்துயிரளிக்கும் வகையில் ஜனாதிபதி முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் சுமார் நான்கு தசாப்த காலமாகக் கவனிப்பாரற்ற நிலையிலிருந்த மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கத் திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் அரசாங்கத்தின் முக்கிய பணியாகக் கருதப்பட்டு, துரிதமாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடுமையான காற்று கவனமாயிருங்கள்

கொழும்பு,டிசெ.24

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம் ஊடாகக் கொழும்பு வரையிலான கடற்பகுதியிலும் காலியிலிருந்து மாத்தறை ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான ஆழமற்ற கடற்பிரதேசத்தில் காற்றின் வேகம் 55 கிலோமீற்றர் வரை அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுச் சனிக்கிழமை தெரிவித்தது.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையான கடற்பகுதியில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும், காற்றின் வேகம் மணிக்கு 40 கிலோமீற்றர் வரை அதிகரிக்கலாமெனவும், கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகக் காணப்படும் என்று திணைக்களம் தெரிவித்தது. (அ)

# இராணுவத்தினர் நடத்தும் இலவச மருத்துவ முகாம்

## உசன் இராமநாதன் ம.வி.யில் இன்று

கொழும்பு,டிசெ.24

இராணுவத்தினரின் ஏற்பாட்டில் அதிவிசேட வைத்தியர்களால் நடத்தப்படும் இலவச மருத்துவ முகாம், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியில் இருந்து மாலை 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன் போது கண் பரிசோதனை, இலவசக் கண்ணாடி வழங்கல், பல் பரிசோதனை, இருதயப் பரிசோதனை, சிசுக்களுக்கான பரிசோதனை, பெண்களுக்கான பரிசோதனை, தொண்டை, காது மூக்குப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

சாவகச்சேரிப் பிரதேச மக்களின் நலன் கருதி 523 ஆவது படைப் பிரிவினர், மருத்துவ முகாமுக்குச் செல்லும் மக்களுக்காக விசேட பஸ் சேவையை மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன் படி காலை 7 மணிக்கு 523 ஆவது படை முகாம் முன்றலிலும், காலை 7.15 மணிக்குச் சாவகச்சேரி

இலங்கை வங்கிக் கிளை அருகாமையிலும், காலை 7.30 மணிக்கு நுணாவில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையிலும் மருத்துவ முகாமுக்குச் செல்லும் மக்கள் குறித்த பஸ்களில் ஏற்றிச் செல்லப்படவுள்ளனர். (அ)

# 2 ஆம் கட்ட மனுத்தாக்கல்: 1553 மனுக்கள் ஏற்பு

கொழும்பு,டிசெ.24

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக, இரண்டாவது கட்டமாக 1553 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையம் நேற்றுச் சனிக்கிழமை அறிவித்தது.

“முதற்கட்டமாக, 93 உள்ளூராட்சி சபைகளுக்குக் கடந்த 11ஆம் திகதி தொடக்கம், 14 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் பெறப்பட்டன. இதன்போது, அரசியல் கட்சிகளால் 466 வேட்பு மனுக்களும், சுயேச்சைக் குழுக்களால் 57 வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இவற்றில் அரசியல் கட்சிகளின் 19 வேட்பு மனுக்களும், சுயேச்சைக் குழுக்களின் 4 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

248 உள்ளூராட்சி சபைகளுக்கான இரண்டாவது கட்ட வேட்புமனுத் தாக்கலில் அரசியல் கட்சிகளின் சார்பில் 1399 வேட்பு மனுக்களும், சுயேச்சைக் குழுக்களினால் 183 வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 1553 வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், 29 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அதிகபட்சமாக, இரண்டு கட்டங்களின் போதும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் 11 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கையில் உள்ள 341 உள்ளூராட்சி சபைகளுக்கும் எதிர்வரும் பெப்ரவரி 10ஆம் திகதி காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை வாக்களிப்பு இடம்பெற்று, உடனடியாக வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்படும்” என்றும் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# குற்றவாளிகளும் வேட்பாளர்கள்

கொழும்பு, டிசெ. 24

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களில் குற்றவாளிகளும் இருக்கின்றனர் எனப் பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

மாட்டு திருடர்கள், கொள்ளையர்கள், நிதி மோசடிகாரரர்கள், போதைப் பொருள் வியாபாரிகள் உட்பட பல்வேறு குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் காணப்படுகின்றனர். பவ்ரல் அமைப்பு மேற்கொண்ட ஆய்விலேயே இது கண்டறியப்பட்டதாக அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இத்தகையவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கையில் உள்ளதாகவும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டதும் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். இத்தகையவர்களுக்கு வாக்களிப்பதைத் தவிர்த்து கொள்ளுமாறு அவர் வாக்காளர்களைக் கேட்டுக் கொண்டார். (ச)




# மகிந்த அணியில் 20 கட்சிகள் சேரும்



கொழும்பு, டிசெ. 24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் நாட்களில் பிரபல 20 கட்சிகளை புதிதாக இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளது.

நேற்று அக்கட்சி நடத்திய விசேட கலந்துரையாடலிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இணையும் கட் சிகள் அனைத்தும் கூட்டணியாக நின்று கூட்டு பொதுஜன பெரமுக என்ற பெயரில் எதிர்காலத்தில் பயணிக்கும் என மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது. (ச)

# தொடர்ச்சிகள்

## அமெரிக்காவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட 128 நாடுகள் வாக்களித்தன. 9 நாடுகள் எதிராக வாக்களித்ததுடன் 35 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வாக்கெடுப்பில் எதிர்த்த நாடுகளுக்கான நிதி உதவியை துண்டிக்கப் போவதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

அமெரிக்காவுக்கு எதிராக வாக்களித்த நாடுகளில் பல வளர்ந்து வரும் நாடுகளாகும். அமெரிக்காவை இலங்கை பகைத்திருப்பதால் மனித உரிமைகள் மற்றும் போர் குற்ற விவகாரங்களில் இலங்கைக்கு பாதகமான நிலைமை தோன்றலாம். அத்துடன் நிதியுதவிகளும் நிறுத்தப்படும் அபாயம் உள்ளதாக இராஜதந்திர மட்டத்தில் பேசப்படுகின்றுது. (ச)

## சமஉரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய சிறப்புமிக்க நபிகள் நாயகத்தின் போதனையைப் பின்பற்றி மண்ணிலே ஆள்கின்றவர்களாகவும் வாழ்கின்றவர்களாகவும் எத்தனையோ கோடி மக்கள் உலகம் பூராகவும் வாழ்ந்து வருகின்றனர். வாழ்க்கையில் துன்பப்பட்டவர்கள் அல்லது அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் துன்ப துயரங்களை அனுபவிப்பவர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒன்றுபட்டு அந்த உரிமைக்காக போராடுகிறார்கள் - போராடுபவர்களாக இருக்கிறார்கள்.

அந்த வகையிலேயே தந்தை செல்வநாயகம் முஸ்லிம் மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்று கூறி அவர்களுடைய உரிமையை அங்கீகரித்தவராக இருக்கிறார். அவரது காலத்தில் பல முஸ்லிம் தலைவர்களும் உருவாகியிருக்கிறார்கள். அந்த வழியில் தலைவராக இருந்த அஷ்ரப்பை நாங்கள் நினைவு கூருகிறோம்.

இந்த மண்ணிலும் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் அனுபவித்து வருகின்ற துன்பங்களுக்கு இந்த நாட்டில் சமமான உரிமைகளோடு வாழ்வதற்கும் அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இத்தகைய உரிமைக்காக போராடுகின்ற தேவை இருப்பதால் மத, சமூக, அரசியல் ரீதியாக ஒன்றாக இணைந்து உழைப்பதற்கு நாங்கள் உறுதி பூண வேண்டும் - என்றார்.

## தமிழரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இதிலேயே இத்தகவல்களை அவர்கள் தெரிவித்தனர். இதன்போது, “தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனநாயகப் போராளிகள் கட்சி இணைந்துள்ளது. ஆனால் பங்காளிக் கட்சியாக இணையவில்லை. பிளவுகள் இருந்தாலும் மூன்று கட்சிகளின் கூட்டமைப்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். எம்மைப் பலப்படுத்தும் நோக்கிலேயே அவர்கள் இணைந்துள்ளனர். அக்கட்சி உறுப்பினர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஊடாக வேட்பாரளாகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்” என சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் இதன்போது கருத்து வெளியிடுகையில் “தமிழரசு கட்சியுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டால் அதை மீளவும் ஒன்றிணைக்கும் சக்தி தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் மட்டுமே இருந்தது. ஆகையால் அவர் இல்லாத தற்போதையை சூழலில் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதனால்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்துள்ளோம்” என்றார். முன்னதாக ஜனநாயகப் போராளிகள் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையும் என முன்னரே செய்திகள் வெளியாகின. ஆனால் இதனைத் கூட்டமைப்பின் தலைவர்கள் உறுதி செய்ய மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ச)

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் மத்திய அமைச்சருமான டிலான் பெரேரா, முதலமைச்சர் விக்னேஸ்வரன் சிறந்த நீதியரசராக இருந்த போதும் அரசியல்வாதியாகத் தோற்றுவிட்டார் என்று அண்மையில் தெரிவித்திருக்கும் கருத்துக்குப் பதிலளிக்கும் விதமாக, பொ. ஐங்கரநேசன் ஊடகஅறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஓர் அரசியல்வாதியாகத் தோல்வியடைந்து விட்டார் எனவும், மத்தியஅரசு வழங்கும் நிதியையே சரியாகப் பயன்படுத்தத் தெரியாத முதலமைச்சர் மலேசியா வழங்கும் நிதியை என்ன செய்வார் என்று புரியவில்லை எனவும் கேலியும் கிண்டலும் தொனிக்க சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரோ பேசியிருக்கின்றார்.

அவர் மட்டுமல்ல, சிங்களத் தரப்பு அரசியல்வாதிகள் பலரும் தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் வடக்கு மாகாண சபையையும் விமர்சிக்கும்போக்கு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. முதலமைச்சரின் மக்கள் செல்வாக்குக்கு அஞ்சும் அரசியல்வாதிகளே, மக்கள் மனங்களில் இருந்து அவரைக் கீழிறக்கும் உள்நோக்கில் இவ்வாறு தவறாக விமர்சித்து வருகின்றனர்.

விக்னேஸ்வரன் நீண்டகாலமாகத் தென்னிலங்கையில் வாழ்ந்தவர் என்பதாலும், சிங்களத் தரப்புடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தமையாலும் அவரைத் தமது விருப்புகளுக்கு ஏற்பக்கையாளலாம் என்பதே சிங்களத் தலைமைகளினதும் அவரை முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கியவர்களினதும் எண்ண ஓட்டமாக இருந்தது. ஆனால், இவர்களது எதிர்பார்ப்புகளுக்கு முற்றிலும் மாறாக முதலமைச்சரின் செயற்பாடுகள் அமைந்தன. தமிழ் மக்களின் அரசியல் வேணவாவையும் போரில் அவர்கள்பட்ட ஆற்றொணாத் துயரங்களையும் நேரில் கண்டுணர்ந்த முதலமைச்சர் அவர்கள், அவற்றுக்கான நிரந்தரத் தீர்வு வேண்டி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் குரல் எழுப்ப ஆரம்பித்தார்.

தங்களின் குரலாகவே முதலமைச்சர் இருப்பதை உணர்ந்த மக்களிடையே அவர் மீதான பற்றும் செல்வாக்கும் உயர்ந்தது. முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டு வருகின்ற செல்வாக்கு, எங்கே மீண்டும் தமிழ்த் தேசியம் பலம் பெற்றுவிடுமோ என்ற அச்சத்தைப் பேரினவாதச் சிங்கள அரசியல் தலைமைகளிடையேயும், எங்கே தங்களுடைய இருப்பு பறிபோய்விடுமோ என்ற அச்சத்தைச் சில தமிழ் அரசியல்வாதிகளிடையேயும் ஏற்படுத்தியுள்ளது. முதலமைச்சரின் மக்கள் பேராதரவுப் பலத்துக்கு அஞ்சும் இவர்கள் கூட்டிணைந்து முதலமைச்சர் அவர்களைப் பதவி கவிழ்க்கும் திரைமறைவுச் சதியில் ஈடுபட்டனர். அமைச்சர்கள் மீதான உண்மைக்குப் புறம்பான ஊழல் குற்றச்சாட்டுகளும் அவர்களது பதவி விலகல்களும், அதைத் தொடர்ந்து ஆளுநர் அவர்களிடம் முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக் கையளிப்பும் இச்சதியின் சில கட்டங்களே.

அதிகாரங்கள் எதுவும் இல்லாத, சுயமாகச் செயற்பட முடியாத மாகாண சபை முறைமையில் உள்ள குறைபாடுகளை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் தனிப்பட்ட குறைபாடுகளாகச் சித்திரித்துக் காட்டி மக்கள் மனங்களிலிருந்து அவரை கவிழ்க்கும் முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இத்தகைய பரப்புரைகளின் பின்னால் உள்ள தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியலைத் தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்துகொள்வார்கள் - என்றுள்ளது.

## முற்றவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “தற்போது உள்ளூராட்சி தேர்தல் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சி சட்டத்தின் பிரகாரம் ஒரு சடலத்தை மயானத்தில் தான் தகனம் செய்ய வேண்டும். ஆனால் அரச - இராணுவ பலத்துடனும் ஆதரவுடனும் தேரரின் உடல் தகனம் செய்யப்பட்டது” என அவர் இதன்போது சுட்டிக் காட்டினார். (ச)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும்,
உறவுகளுக்கு அறிவிக்கவும்

மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்


எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயித்தது யார்? முடிவு இன்று



சென்னை,டிசெ.24

ஆர்.கே.நகர் தொகுதியில் பலத்த பாது காப்புடன் இன்று ஞாயிற்றுக்கிழமை வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. முதலில் தபால் மூலமான வாக்குகளும், பின்னர் வாக் குப் பதிவு எந்திரங்களில் பதிவான வாக்குக ளும் எண்ணப்படும்.

ஆர்.கே.நகர் தொகுதிக்குக் கடந்த 21 ஆம் திகதி இடைத்தேர்தல் நடந்தது.

இதில் அ.தி.மு.க. வேட்பாளர் மதுசூத னன், தி.மு.க. வேட்பாளர் மருதுகணேஷ், பா.ஜ.க. வேட்பாளர் கரு.நாகராஜன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கலைக் கோட்டுதயம், சசிகலா அணி சார்பில் தின கரன் மற்றும் சுயேச்சைகள் என 59 வேட் பாளர்களும் போட்டியிட்டனர்.

இந்தத் தொகுதியில் மொத்தம் உள்ள 2 இலட்சத்து 28 ஆயிரத்து 234 வாக்காளர் களில் 1 இலட்சத்து 76 ஆயிரத்து 885 பேர் வாக்குப்பதிவு செய்தனர்.

மொத்தம் 77.5 சதவீதம் வாக்குகள் பதி வாகியமை குறிப்பிடத்தக்கது. (இ)



# கவிழ்ந்தது பஸ் 27 பேர் பலி

ஜெய்ப்பூர்,டிசெ.24

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று சனிக்கிழமை, ஆற்றுக்குள் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் உயிரிழந்ததோடு, மேலும் சிலர் காயம டைந்தனர்.

ராஜஸ்தான் மாநிலம் சபாய் சவாய் மதோபூர் நகரிலிருந்து சுமார் 40 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் லால்கோட் நோக்கி குறித்த பஸ் சென்று கொண்டிருந் தது. துபி என்ற இடத்தில் உள்ள ஆற்றுப் பாலத்தில் வந்தபோது பஸ் திடீரென சார தியின் கட்டுப்பாட்டை இழந்து தாறு மாறாக ஓடியது.

பின்னர் பாலத்தின் தடுப்புச் சுவரை உடைத்துக்கொண்டு ஆற்றுக்குள் விழுந் ததில் பஸ் தண்ணீரில் மூழ்கியது. குறித்த விபத்தில் 27 பேர் உயிரிழந்திருப்பதாக வும், சிலர் ஆபத்தான நிலையில் மீட்கப் பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# பாகுபலியை வீழ்த்திய 'விக்ரம் வேதா'



மும்பை,டிசெ.24

பிரபல இணையத்தளத்தின் 2017 ஆண்டின் சிறந்த 10 இந்தியப் படங்கள் பட்டியலில் 'விக் ரம் வேதா' முதல் இடத்தைப் பிடித்து, பாகுபலி யைப் பின்னுக்குத் தள்ளியது.

இணையத்தளங்களில் படங்களைப் பற்றிய தகவல்களை கொடுப்பதில் முக்கியமானது ஐ.எம்.டி.பி இணையதளமாகும். 2017 ஆம் ஆண் டுக்கான சிறந்த 10 இந்தியப் படங்களை தரவரி சைப்படுத்தி இருக்கிறது.

அந்த வரிசையில் 10 ஆவது இடத்தில் மலை யாள படமான 'தி க்ரேட் பாதர்', 9 ஆவது இடத்தில் 'மெர்சல்', 8 ஆவது இடத்தில் இந் திப் படமான 'ஜாலி எல்.எல்.பி 2', 7 ஆவது இடத்தில் இந்திப் படமான 'டாய்லெட்- ஏக் பிரேம கதா', 6 ஆவது இடத்தில் தமிழ், தெலுங்கு மற்றும் இந்தியில் வெளியான 'தி காஸி அட் டாக்', 5 ஆவது இடத்தில் இந்திப் படமான 'இந்தி மீடியம்', 4 ஆவது இடத்தில் இந்திப் படமான 'சீக்ரெட் சூப்பர்ஸ்டார்', 3 ஆவது இடத்தில் தெலுங்கில் பெரும் வரவேற்பைப் பெற்ற 'அர்ஜூன் ரெட்டி', 2 ஆவது இடத்தில் ராஜமௌலியின் 'பாகுபலி - 2' மற்றும் முதல் இடத்தில் மாதவன் - விஜய் சேதுபதி நடித்த 'விக்ரம் வேதா' என்பன இடம் பிடித்துள்ளன. (இ)

# நேருக்கு நேர் மோதிய ரயில்கள்



ஒஸ்திரியா,டிசெ.24

ஒஸ்திரியாவில் ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் பயணிகள் பலர் காய மடைந்தனர்.

ஒஸ்திரியாவின் தலைநகரான வியன் னாப் பகுதியிலிருக்கும் ரயில் நிலையத் துக்கு அருகில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் 15 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாக வும், இதில் 6 பேர் மிகவும் ஆபத்தான நிலை யில் உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அறிந்து 30 அம் புலன்ஸ், இரண்டு ஹெலிகொப்டர் என்ப வற்றுடன் விரைந்து சென்ற பொலிஸார் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத் தனர்.

இது குறித்து மீட்புப் படை அதிகாரி "விபத்தில் சிக்கியிருந்தவர்கள் அனைவரை யும் பத்திரமாக மீட்டுவிட்டோம், இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என் பது குறித்து விசாரணை மேற்கொள்கின் றோம்" எனத் தெரிவித்தார். (இ)

# கோடி வருமானம் சல்மான் முதலிடம்



மும்பை,டிசெ.24

உலக கோடீஸ்வரர்களைப் பட்டியலிடும் 'போர்ப்ஸ்' பத்திரிகை கணிப்பின் படி ஓராண் டில் 232.83 கோடி ரூபா வருமானத்துடன் பாலிவுட் நடிகர் சல்மான் கான் இந்தியாவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

உலக கோடீஸ்வரர்களைப் பட்டியலிடும் 'போர்ப்ஸ்' பத்திரிகை இந்தியாவில் அதிக வரு மானம் ஈட்டும் 100 பிரபலங்களை ஆண்டு தோறும் பட்டியலிடுவது வழமை.

இந்த ஆண்டுக்கான பட்டியலில் கடந்த ஆண்டு முதலிடத்தில் இருந்த ஷாருக்கானை பின்னுக்குத் தள்ளி இந்த ஆண்டு சல்மான்கான் முதலிடத்திலும், ஷாருக்கான் இரண்டாமிடத் திலும், கிரிக்கெட் வீரர் விராட் கோலி மூன்றா மிடத்திலும் உள்ளனர்.

இந்தப் பட்டியலில் முதல் 10 வரிசையில் இடம் பிடித்துள்ள ஒரே பெண் நடிகை பிரி யங்கா சோப்ரா 68 கோடி ரூபா வருமானத்து டன் ஏழாவது இடத்திலுமுள்ளார். (இ)

# தற்கொலைத் தாக்குதல்: ஆப்கானில் 6 பொலிஸ் சாவு

ஆப்கானிஸ்தான்,டிசெ.24

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் ஆறு பொலி ஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொல்லப்பட்டனர்.

இது குறித்து அதிகாரிகள் 'ஆப்கானிஸ்தா னின் கந்தஹார் மாகாணத்தில் உள்ள பொலிஸ் தலைமையகத்தில் தலிபான் தீவிரவாதிகள் தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தினர். இதில் ஆறு பொலிஸார் கொல்லப்பட்ட தோடு, 4 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்' என்று தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த ஒக்டோபர் மாதம் இராணுவ முகாம் மீது தலிபான்கள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குத லில் 43 பேர் பலியாகியமை குறிப்பிடத் தக்கது. (இ)



# ஐ.நா தீர்மானத்தை இஸ்ரேல் நிராகரிப்பு

இஸ்ரேல்,டிசெ.24

இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அங்கீகரித்ததை எதிர்த்து ஐ.நா. பொதுச் சபையில் தீர்மா னம் நிறைவேற்றப்பட்டது.

இதை இஸ்ரேல் திட்டவட்டமாக நேற்றுச் சனிக்கிழமை நிராகரித்தது.

இஸ்ரேலில் உள்ள ஜெருசலேம் பகுதி யாருக்குச் சொந்தம் என்பதில் பல ஆண்டு களாகச் சர்ச்சை நீடிக்கிறது. இதனால் டெல் அவிவ் நகரில்தான் வெளிநாட்டுத் தூதர கங்கள் உள்ளன. போரின்போது ஜெருச லேமை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளதாக பலஸ்தீனம் கூறிகிறது.இந்த நிலையில்,

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநக ராக அங்கீகரிப்பதாகவும், டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தை, ஜெருசலேமுக்கு மாற்றுவதாகவும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் அறிவித்தார். இதைக் கண்டித்துப் பல நாடுகளில் அமெரிக்காவுக்கு எதிராகப் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், ஐ.நா. தீர்மானத்தை இஸ்ரேல் திட்டவட்டமாக நிராகரித்தது. இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச மின் நேதன்யாகு "ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெ டுப்பில் பங்கேற்காமலும், தீர்மானத்தை எதிர்த்தும் வாக்களித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தத் தீர்மா னத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த காலங்களில் ஜெருசலேம் இஸ்ரேலின் தலை நகராக இருந்தது.



எதிர்காலத்திலும் தலைநகராக விளங் கும். இதில் எந்த மாற்றமும் இல்லை" என் றார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரேயொரு தவறால் தலை குனிந்த அணி


இந்தூர், டிசெ.24

இந்திய வீரர் லோகேஷ் ராகுல் கொடுத்த எளிதான பிடியெடுப்பு வாய்ப்பை இலங்கை வீரர் தவறவிட்டதாலேயே இந்திய அணி 260 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை , இரண்டாவது 'ரி-20' போட்டியில் எட்ட முடிந்தது.

இலங்கை - இந்தியா இடையிலான இரண்டாவது ரி-20 போட்டியில் இந்தியா 260 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியின் தொடக்க வீரர் லோகேஷ் ராகுல் அபாரமாக விளையாடி 89 ஓட்டங்கள் குவித்தார். ஆட்டத்தின் மூன்றாவது ஓவரை அஞ்சலா மத்யூஸ் வீசிய போது ராகுல் கொடுத்த எளிதான பிடியெடுப்பு வாய்ப்பை இலங்கை வீரர் சமரவிக்ரம தவறவிட்டார்.

அப்போது ராகுல் வெறும் 6 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தார்.

இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திய ராகுல் பின்னர் அதிரடியாக ஆடி 89 ஓட்டங்கள் குவித்து அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர வழிவகுத்தார். சமரவிக்கிரம விட்ட ஒரு தவறு முழு அணியையுமே தலைகுனிய வைத்த தோல்விக்கு வித்திட்டுள்ளது.(அ)



# அரையிறுதிக்கு செல்சி, பிறிஸ்டல்

லண்டன், டிசெ.24

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான ஈ.எவ்.எல் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு செல்சி, பிறிஸ்டல் சிற்றி ஆகிய அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் ஏ.எவ்.சி போர்ண்மெத் அணியை வென்றே அரையிறுதிப் போட்டிக்கு செல்சி தகுதிபெற்றுள்ளது.

இந்தப்போட்டியின் 13ஆவது நிமிடத்தில், சீஸ்க் பப்ரிகாஸிடமிருந்து பெற்ற பந்தை வில்லியன் கோலாக்க செல்சி முன்னிலை பெற்றது. இந்த நிலையில், போட்டியின் இறுதி நிமிடங்களில் கலும் வில்சன் கொடுத்த பந்தை டான் கொஸ்லிங் கோலாக்க கோல் எண்ணிக்கையை போர்ண்மெத் சமப்படுத்தியது. எனினும் இதைத் தொடர்ந்து, ஈடின் ஹஸார்ட் கொடுத்த பந்தை கோலாக்கிய, மாற்று வீரராகக் களமிறங்கிய அல்வரோ மொராட்டா, 2-1 என்ற கோல் கணக்கில் செல்சிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்க அரையிறுதிப் போட்டிக்கு செல்சி தகுதி பெற்றது.

இதேவேளை நடப்பு ஈ.எவ்.எல் கிண்ணத் தொடரின் சம்பியனான மன்செஸ்டர் யுனைட்டட் அணி, பிறிஸ்டல் சிற்றியிடம் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியது.

குறித்த போட்டியின் 51 ஆவது நிமிடத்தில் ஜோ பிரயன் பெற்ற கோலின் மூலம் பிறிஸ்டல் சிற்றி முன்னிலை பெற்றது. எனினும் அடுத்த ஏழாவது நிமிடத்தில் ஸல்டான் இப்ராஹிமோவிக் பெற்ற கோலின் மூலம் மன்செஸ்டர் யுனைட்டட் அணி கோல் எண்ணிக்கையைச் சமப்படுத்தியது. ஆயினும் போட்டியின் இறுதி நிமிடத்தில் கொரே ஸ்மித் பெற்ற கோல் காரணமாக 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற பிறிஸ்டல் சிற்றி, அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

அந்தவகையில், ஓர் அரையிறுதிப் போட்டியில், மன்செஸ்டர் சிற்றியை பிறிஸ்டல் சிற்றி எதிர்கொள்வதுடன், மற்றைய அரையிறுதிப் போட்டியில் ஆர்சனலை செல்சி எதிர் கொள்கிறது. (அ)

# மாறுகிறார் அஸ்வின்



புதுடெல்லி, டிசெ.24

இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின், அணியில் மீண்டும் இடம் பிடிக்க 'லெக் ஸ்பின்' பந்து வீசு முறையைக் கற்று வருகிறார்.

இந்திய கிரிக்கெட் அணி, சமீபகாலமாக லெக் ஸ்பின் பந்து வீச்சாளர்களையே அதிகம் பயன்படுத்தி வருகிறது. ஒருநாள் போட்டிகளில் அவர்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, இலங்கையில் நடைபெற்ற ஒருநாள் தொடரிலும் ஆரம்பித்து சாஹல், குல்தீப் யாதவ் போன்ற லெக் ஸ்பின் பந்துவீச்சாளர்களே ஆதிக்கம் செலுத்தினர். இதன் காரணமாக அஸ்வின் மற்றும் ஜடேஜாவுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தென்னாபிரிக்கத் தொடருக்கு தயாராகி வரும் அஸ்வின், ஓஃப் ஸ்பின்னராக இருந்தாலும், தற்போது லெக் ஸ்பின் முறையில் பந்துவீச முயற்சித்து வருகிறார்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில், நேற்று நடைபெற்ற விஜபி கிண்ணப் போட்டியில் பங்கேற்ற அஸ்வின், கிராண்ட் ஸ்லாம் அணிக்கு எதிராக வீசிய 9 ஓவர்களில் ஆறு ஓவர்களை லெக் ஸ்பின் முறையில் வீசியுள்ளார். லெக் ஸ்பின் பந்து வீச்சில் அவருக்கு இரண்டு விக்கெட்டுகள் வீழ்ந்தன. அவர் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளேவின் பந்துவீசும் முறையை பின்பற்றுவதாகக் கூறப்படுகிறது. (அ)






# பட்ட காலிலேயே படும்

புதுடெல்லி, டிசெ.24

தொடர் தோல்விகளால் துவண்டுள்ள இலங்கை அணியின் நட்சத்திர வீரரான அஞ்சலோ மத்தியூஸ் மீண்டும் காயமடைந்ததால், மூன்றாவது 'ரி-20' போட்டியில் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது இலங்கை அணிக்கு இன்னும் பின்னடைவை உண்டுபண்ணியுள்ளது.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான 2 ஆவது 'ரி-20'.போட்டியின்12 வது ஓவரை வீசிய இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்யூஸ் இடைநடுவே உபாதைக்குள்ளானார். இவருக்கு ஏற்பட்டுள்ள தசைப்பிடிப்பு காரணத்தால் இரண்டாவது போட்டியில் மத்யூஸ் துடுப்பெடுத்தாடவும் களமிறங்கவில்லை. இந்த நிலையில் மத்யூஸ் மூன்றாவது போட்டியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் இருவாரங்கள் ஓய்வெடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளார். (அ)


# Techno World

(வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி)

A/L தொழில்நுட்ப பிரிவு - 2020

தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

**சக்தி** (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
**ராகவன்** (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
**முருகநிரோஜன்** (யா/வயாவிளான் ம.கல்லூரி)
**மதுசூதன்** (யாழ் பல்கலைக்கழகம்)

பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

**அருண்குமார்** (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
**ஜெகநாதன்** (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)
**சிவஜன்** (தொழில்நுட்பக்கல்லூரி)

உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)

**திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)
**கலைதீபன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)
**பொன் சிவகுமார்**

ICT

**லவன்** (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)
**உமாகாந்தன்** BIT (யா/மத்திய கல்லூரி)

புவியியல் — **ஜெனகன்** (J.H.C)
ஊடகக்கல்வி — **கோணேஸ்**
விவசாய விஞ்ஞானம் — **சாரங்கன்**
பொருளியல் — **பிரதீபன்**
இலகு கணிதம் — **ஹரிகரன்**
வணிகக்கல்வி — **தீசன்**
சித்திரம் — **ஜெயந்தன்** (J.H.C)
கணக்கீடு — **சுகிர்தன்**

0770175346, 077 1703549


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.